2025 – ஆகஸ்டு மாதம் 25– ஆம் தேதி திங்கட்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 169/2023*

*2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25– ஆம் தேதி திங்கட்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 2, சண்முகம் |
| தந்தையார் பெயர் | : | முத்தையா |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | மருத்துவர் (நியூரோ சர்ஜன்) |
| வயது | : | 36 |

**தேதி: 25.08.2025**

**முதல் விசாரணை:–**

நான் தற்பொழுது திருச்சி சுந்தரம் மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் நான் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் **ம.சா.ஆ.6** மருத்துவ விடுவிப்பு அறிக்கை என்னால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் மல்லிகா என்பவருக்கு ஏற்பட்ட விபத்தில் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதில் இரத்தினா குளோபல் மருத்துவமனையில் ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 5 மாதங்களுக்கு பின்னர் 05.07.2023–ம் தேதி எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் 07.07.2023–ம் தேதி வரை எங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார். மேற்படி மனுதாரருக்கு வலிப்பு நோய் இருந்ததால் எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். விபத்து காயங்களின் காரணமாகதான் மேற்படி வலிப்பு அவருக்கு உண்டானது. மூளையில் இடது பகுதியில் இரத்தக்கசிவு ஏற்பட்ட நிலையில் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டதால் வலிப்பு வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

மனுதாரருக்கு சிடி ஸ்கேன் எடுத்து பார்த்ததில் பழைய காயங்கள் இருந்தது தெரிய வந்தது. மேற்படி காயங்கள் அனைத்தும் குணமடைந்து தழும்புகளாக இருந்தது. மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை மனுதாரர் எடுத்துக் கொள்ளாததால்தான் வலிப்பு நோய் ஏற்பட்டதாக விடுவிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வலிப்பு நோய் குணமடைந்த பின்னர்தான் மனுதாரர் எங்கள் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். இறப்பிற்கான காரணம் தெரிய வேண்டும் என்றால் பிணக்கூறாய்வு அறிக்கை இருந்தால் மட்டுமே மேற்படி இறப்பிற்கான காரணத்தை தெரிந்து கொள்ள முடியும். ம.சா.ஆ.6ல் முந்தைய மருத்துவ வரலாற்றை குறிப்பிடும் போது அதில் மனுதாரருக்கு வலிப்பு நோய் இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை:–இல்லை.**

ஒப்பம்/– கி. முரளிதரக்கண்ணன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.